உ
சிவமயம்




கைதடி வடக்கு, சேனாதிராசா முதலியார் வழித்தோன்றலில் வந்துதித்த

அமரர்

# செல்லப்பா கார்த்திகேசர்

அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும்

# சுயசரிதை தொகுப்பு மலர்

05.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கைதடி வடக்கு, சேனாதிராசா முதலியார் வழித்தோன்றலில் வந்துதித்த

அமரர்

# செல்லப்பா கார்த்திகேசர்

அவர்களின்

ஞாபகார்த்தமாக வெளியிடப்படும்

# சுயசரிதை தொகுப்பு மலர்

## 05-05-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அன்புத் தெய்வத்தின்
## திருவடிகளுக்குச்



# சமர்ப்பணம்

கருவிலே உருவமாய் வந்தபோது
காற்றாகி உயிரைத் தந்தீர்கள்
மாதாவின் மடியிலே மழலையானபோது
பிதாவாகி மொழியைத் தந்தீர்கள்
குறும்புகள் செய்கின்ற குழந்தையானபோது
குருவாகிக் கல்வியைத் தந்தீர்கள்
குணமான மருமக்களை மனையழைத்தபோது
குறைவின்றி ஆசியைத் தந்தீர்கள்
நிலையான மக்கட் செல்வத்தின் வளர்ச்சிக்காக
நினையே மெழுகிவர்த்திபோல் உருக்கி ஒளியூட்டினீர்கள்
நாம் செய்யும் தொழிலே நலமானபோது
நாடியே வளத்தைத் தந்தீர்கள்
அன்பான வாழ்வெல்லாம் காட்டிவிட்டு
அலைபோல வானில் மறைந்தீர்கள்
தோளேற்றி வாழவைத்த எங்கள் பப்பா உங்கள்
தாள் போற்றி இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓம் கணபதயே நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



அன்னை மடியில்
28.01.1925



ஆண்டவன் அடியில்
05.04.2009

அமரர்

# செல்லப்பா கார்த்திகேசு

அவர்கள்

## திதி நிர்ணயம்

பார்புகழ் சர்வதாரி பங்குனி இருபத்து மூன்று
சீர்பெறும் பூர்வபக்க ஏகாதசி - கார்த்திகேசர்
பேர்பெறு முருகவேலன் திருவடி நீழல்வேண்டி
ஆர்த்தனன் குமரகோட்டம் சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையா யென்நெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மாருதி கவசம்

மார்கழி மூலம் அனுமன் பிறந்தான்
அனைவர்க்கருள அவனியில் வந்தான்
அஞ்சனை மாருதம் அளித்த நற்செல்வன்
அனுமனைப் போற்றி அவனியில் வாழ்த்த
காக்க காக்க அனுமன் காக்க
நோக்க நோக்க நுணுகி நோக்க
தீர்க்கத் தீர்க்கத் தீவினை எல்லாம்
சேர்க்கச் சேர்க்கச் செம்பொருள் அனைத்தும்
ஆர்க்கும் பகைவர் அலறி ஓடிட
வேர்க்குள் பகையாய் விழைந்தவர் அழிய
காக்க காக்க கண்ணுதல் காக்க
பார்க்குள் அவன்போல் இறைவன் இல்லை
ஓம் ரீம் ஸ்ரீ ஜய ராம் எனும் அனுமன்
கரீம் கலீம் ஸ்ரீராம் பக்த அனுமன்
ஹம் கரீம் என்றே கொடியில் ஆர்க்கும்
ஸ்ரீஜய ராம பக்த அனுமன்
காக்க காக்க கவசம் இதனை
போக்கப் போக்க பொய்யைத் தீமையைத்
தீய்க்கத் தீய்க்கத் தீவினை எல்லாம்
சேயாய் பிறந்து செய்வினை அறிந்து
காக்க காக்க அனுமன் காக்க
காக்க காக்க கால்கள் இரண்டை
காக்க காக்க கணுக்கால் முழந்தாள்
காக்க காக்க கருணையில் காக்க
அட்டமச் சனியால் அடையும் துன்பம்
அனைத்தும் நீக்கி அனுமன் காக்க
சிற்றிடை அதனை அஞ்சனைச் செல்வன்
சிறப்புடன் காக்கச் சேர்க்கப் பெருமை
நற்றவ மிக்கோ நவையறு நல்லோர்
நாணாங் கயிற்றை அனுமன் காக்க
நற்குறி தன்னைக் காற்றின் செல்வன்
காக்க காக்க காக்க வந்து வந்தே
தீர்க்கத் தீர்க்கத் தினகரன் மாணி
தீராக் கொடுமை எல்லாம் தீர்க்க
ஈரல் இரைப்பை இதனைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலைத் தூண்டும் அரியவன் நீயே
மார்பைக் காக்க மாருதி மகிழ்ந்தே
மற்றுள உறுப்பைச் சற்குணன் காக்க
சற்று மேலான கழுத்தை அனுமன்
தீக்குள் புகையாய்த் திகழும் பொய்மை
போக்கப் போக்க புன்மையைப் போக்க
குருதி அதனில் ஒரு ரணம் இன்றி
மாருதி காக்க மாருதம் காக்க
உறுதி அளிக்கும் உயர்வோன் காக்க
அஞ்சனைச் செல்வன் அடியினைக் காக்க
வஞ்சனை ஏதும் வாட்டா வண்ணம்
ஆஞ்ச நேயனே அடிவயிறு காக்க
துஞ்சும் போதும் துயருறா வண்ணம்
காக்க அனுமன் கண்ணினைக் காக்க
போக்க எந்தப் பொல்லா வினையும்
நோக்க நோக்க உண்மையை உறுதியை
தீக்குள் இலங்கை செற்றான் காக்க
போக்கும் வரத்தும் கபீந்திரன் காக்க
நோக்கம் காக்க நுணுகி நோக்க
பிட்டம் அதனை அனுமன் காக்க
வட்டக்குதத்தை வாலினாற் காக்க
ஆர்வமுடனே அணைத் தெனைக் காக்க
அனைத்துப் பல்லையும் அனுமன் காக்க
அருவிழி இரண்டும் ஆர்ப்பகை காக்க
அனைத்துப் பெருமை எனக்கு வரினும்
தருவெனும் அனுமன் என் சிரம் காக்க
நாசியை வாசியை நல்லவன் காக்க
பெருமைகொள் அனுமன் பிடரியைக் காக்க
பேசிடும் நாவைப் பெரியோன் காக்க
அருவிழி தன்னில் அனுமன் காக்க
அரஹர சிவசிவ ஸ்ரீஜய ராம மென
அனைவரும் துதிக்கும் அனுமனே காக்க
காக்க காக்க கவலைகள் நீக்க
ஐயும் கிலியும் சௌவும் நீக்கி
அனைத்தும் அழிக்கும் அரியவன் காக்க
பொய்யும் களவும் போதறு கென்றே
புரையா அன்பு மறைமுதல் காக்க
வருக வருக அனுமன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக அஞ்சனைச் சிறுவன்
கெருவம் தீர்க்க வருக அனுமன்
அருவரு அதுவாய் அனுமன் வருக
ராம சாமியின் தூதன் வருக
நாமம் ஆயிரம் சாற்றுவோன் வருக
காமம் நீக்கிய கடவுள் வருக
ஏமப் புனையாம் எம்மிறை வருக
அருளுருவாகிய ஐயா வருக
தெருளினை மாற்றும் தேவா வருக
வருகவே வைக்கும் ஒருவர் வருக
மருளுற வைக்கும் மாருதி வருக
விந்தைக் கிறையாம் வித்தே வருக
முந்தித் தவம்செய் மூதறி முதல்வா
சிந்தித்து இன்னே சீக்கிரம் வருக
வந்தித்தோம் உனை வருக வென்று
வஞ்சனை அகலும் வயிரம் வாய்க்கும்
துஞ்சிரும் போதும் துன்பம் வராது காண்
அஞ்சுவர் பகைவர் அடலே றனையான்
நஞ்சுண்டாலும் நம்முயிர் காப்பான்
கோளாறு பாபம் தீர்க்கும் அனுமன்
பாழ்பிறவி தனையே நீக்கும் அனுமன்
கேளென வந்து உதவிடும் அனுமன்
வாழ்வுறச் செய்யும் வடிவுடை இறைவன்
நாற்ப தோடைந்து நாளே அவனை
நோற்பவர் பற்பல பெறுவர் இதனை
நூற்பயன் பெற்றிட நல்குவன் அனுமான்
அனுமன் எனுமோர் அறமே கவசம்
அனுமன் எனுமோர் அறிவே கவசம்
அனுமன் எனுமோர் அணு நேர்த்தியனே
தினமென் கவசம் திவ்யம் அருள்வோன்
எண்ணினேன் உன்னை என்றன்
எழிலுரு தேகம் தன்னில்
நண்ணிடப் பலமும் வேட்டேன்
நல்குவை அனுமன் காக்க.

மேலே சொல்லப்பட்ட இந்த ஸ்ரீ ஆஞ்சநேயரின் கவசம் அதிகச் சக்தி வாய்ந்தது. மிகவும் உன்னதமானது. தினசரி ஒரு தடவை பாராயணம் செய்து வந்தால் நல்ல பலன்கள் விளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிராசா முதலியார் வழித்தோன்றலில் தோன்றி
அமரத்துவமடைந்த கோமகன் செல்வச் சீமான்

அமரர்

# செல்லப்பா கார்த்திகேசர்

அவர்களின்

# வாழ்வு பற்றிய தொகுப்பு

**நாட்டுச்சிறப்பு**

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் ஈழமணித் திருநாடாம் இலங்கையின் திங்கள் மதி முடியாக விளங்கும் யாழ்ப்பாண நன்னகரதில் எழில் கொஞ்சும் தெங்கு, பலா, மா, வானுயர்ந்த பனைகள் போன்ற சரித்திரம் சொல்லும் வளங்களையும், மொழிவளத்தையும் கொண்ட பிரதேசம் தென்மராட்சி ஆகும்.

இதன் மேற்குப்புற எல்லையில் நீலக் கருங்கடலையும், தோகை விரித்தாடும் நெல்மணிவிளையும் வயலும், அங்கும் இங்கும் பச்சைப்பசேலென புகையிலை, மிளகாய் தொங்கும், கனித்தோட்ட வாழைமரமும், பங்கமின்றிச் செழித்திடும் பசுமைமிக்க நகர் கைதை நகர். இச்சிறப்பு மிக்க கைதையம் பதியிலே பிள்ளையாருடைய கை தறிக்கப்பட்டுக் கண்டெடுக்கப்பட்ட காரணத்தினாற் கைதறி எனப் பெயர் வந்ததாகவும், அப்பெயர் பின்னர் மருவிக் கைதடி என மாற்றம் பெற்றதாகவும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க எட்டுத்திசைகளிலும் பிள்ளையார், வைரவர், பெரியதம்பிரான், முருகன், நாச்சிமார், அம்மன், சிவபூதராசர், காளி போன்ற தெய்வத் திருத்தலங்கள் உள்ளன. இவ்வூரை மேலும் அழகுபடுத்த ஆயுள் வேத மருத்துவ நிலையம், செவிப்புலன் விழிப்புலன் அற்றோர் பள்ளி, தள்ளாடும் வயதினருக்கு முதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம். பாலர் பள்ளி முதல் க.பொ.த. உயர்தரம் வரையிலான பாடசாலைகள், ஆங்கில வைத்தியசாலை ஆகியன உள்ளன. "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்" என்ற வாக்கியத்திற்கேற்ப ஏர்பிடிக்கும் மக்களும் கற்றோரும் பாவலரும் நாவலரும் வர்த்தகர்களும் வித்தகர்களும், தூதுவளை, குறிஞ்சா, பொன்முசிட்டை, கொவ்வை துயர்தீர்க்கும் ஒடியற்கூழ், பிட்டு உண்டு ஓதுகின்ற சுகம் கண்டு வாழ்ந்த மக்கள் இவ்வூர் மக்களன்றோ.

**வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பு**

கருமைபெறு கடல் நீரும், நீலவானும் கைகோர்த்துத் திரிகின்ற, நித்தம் தன்னை நாடிவருகின்ற அடியவர்க்கு அருள் சுரந்து அருள்புரிந்திடும் முருக பதியில், சொல் வளமும் சைவப் பண்பாடும் சேர்ந்து விளங்கிய சேனாதிராசா முதலியார் வழித்தோன்றலில் வந்த நடராசா செல்லப்பா அவர்களுக்கும், திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்கும் வந்துதித்த சுந்தரச் செம்மல்தான் கார்த்திகேசர். இவருடைய தாயார் முருக பக்தை. ஆதலால், இவருக்கு முருக நாமத்தை வைத்து அவருள்ளே இறைவனைக் கண்டார். அன்பை நாடும் உள்ளங்களில் இறைவன் வீசும் தென்றற் காற்றாக அமருவார். ஆனால், அநீதி நிலவும் வேளைகளில் அவர் கடும் புயற்காற்றாக மாறுவார் என்பதனைச் சிந்தனைச் சிற்பிக்கு அவரது பெற்றோர் கற்றுக் கொடுத்தனர். "தேனை மறந்திருக்கும் வண்டும் வானை மறந்திருக்கும் பயிரும், இந்த வையகம் முழுவதிலும் இல்லை" என்றதற்கமைய அன்னார் முருகனை நாளும் பொழுதும் துதித்து வந்தார். இவர் சிறுவயதிலே தமிழில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். ஆதலால் திருவிழாக் காலங்களில் நடக்கும் கந்தபுராண படலம், திருவெம்பா படலம் போன்றவற்றிற்குப் பயனை மிகவும் அழுத்தமாகவும் திருத்தமாகவும் சொல்வதில் இவருக்கு நிகர் யாருமில்லை. இவரிடம் அருள் பொழியும் வதனம், ஒளிபடைத்த கண்கள், கனிவு ததும்பும் பார்வை, புன்னகை பூக்கும் மென்வாய், தோழமை காட்டும் உறவு, நுண்ணிய அறிவு, பண்ணிய பாசம், தளராத முயற்சி, பீடு நடை, அஞ்சா நெஞ்சம், மன்னிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை, எதையுந் தாங்கும் இதயம் ஆகியனவற்றை ஒன்றிணைந்த கட்டழகனே கார்த்திகேசர் ஆவர்.

**சகோதரி சகோதரச் சிறப்பு**

குலந்தழைக்க வந்துதித்த குணக்குன்றாம், மங்காப்புகழ் பெற்று விண்ணகம் நீத்திட்ட அக்காள் பொன்னுவுடன் அவர்தம் மணாளன் சுப்பிரமணியம் பிள்ளைச் செல்வங்களான குஞ்சுப் பிள்ளை (புருனை), வள்ளியம்மை, பரமேஸ்வரி, பண்டிதர் செகசோதியம்மாள் (அமரர்), சிவபாக்கியம் (தாதி மேற்பார்வை யாளர்), கனகமணி எனப் பெயர்சூட்டி அகமகிழ்ந்த அன்பு மருமகன் பேரின்பலிங்கத்துடன் விண்ணே முன்சென்ற அண்ணனவன் சுப்பிரமணியம் (பாண்டியர்) கைம்பாவை தெய்வானைப் பிள்ளையுடன் அவர்தம் மகனாம் இந்திரராசா (கிராம சேவையாளர்), கண்ணியவான் சின்னையா அவர் இல்லத்தரசி சிவபாக்கியம் மழலைகளாம் கமலாஜினி, செல்வராணி (உபதபாலதிபர்), வித்தக நர்த்தனன் இராசையாவுடன் அவர்தம் மங்கை பரமேஸ்வரி குணக்குன்றாம் குருசாமி ஆகியோரை உடன் பிறப்புக்களாய்ப் பெற்று, உவகை கொண்டு வாழ்ந்த உத்தமசீலன் கார்த்திகேசர் என்னும் சான்றோன்.

**கல்விச் சிறப்பு**

"கற்கை நன்றே கற்கை நன்றே" பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது சான்றோர் வாக்கு. இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் கைதடி குருசாமி வித்தியாசாலையிலும் பின்னர் யாழ். கைதடி தெற்கு முத்துக் குமாரசாமி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் கற்றார். இவர் சிறுவயதிலேயே கணிதம், தமிழ் ஆகிய பாடங்களிற் சிறந்து விளங்கினார். இதன் காரணமாக தமிழ், கணிதம், பூமிசாஸ்திரம், குடியியல் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தி எய்தினார். கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம் என்பதால் அன்னாரின் பெற்றோர்கள் சிறந்த கல்வியைச் சிறுவயதிலேயே தம் மகனுக்கு அளித்தனர். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது படிப்பை முடித்துவிட்டுச் சிறிதுகாலம் இவரது உறவினரான செல்லத்துரை யின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். கைதடி வடக்கு ப.நோ.கூ. சங்கத்தில் முகாமையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது ஆசிரியத் தொழில் இவரைத் தேடி வந்தது. இவர் தனது ஆசிரியத் தொழிலை அம்பாந்தோட்டை, அனுராத புரம், ரத்தோட்டை, மாத்தளை ஆகிய இடங்களில் மேற்கொண் டார். "செய்யுந் தொழிலே தெய்வம்" என்பதற்கிணங்கத் தனது தொழிலைக் கண்ணியத்துடனும், கடமைப்பாட்டுடனும் மேற் கொண்டார். இவரொரு இலக்கியவாதி, இவருடைய வாயில் இருந்து வருகின்ற சொற்கள் இலக்கிய நயமுடையனவாக இருக்கும். வான சாஸ்திரத்தையும் தனது உறவினர் தம்பு மூலம் ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டார். இதன் பலனாக கிணறு, வீடு நிலையம் எடுப்பதில் சிறந்து விளங்கினார். இவரை அயலவர்கள் வாத்தியார் என்று செல்லமாக அழைப்பார்கள். இவ்வாறாகச் சுந்தர வடிவழகன் கார்த்திகேசர் தொட்டு ஊரெங்கும் புகழ் பரப்பி நின்றார்.

**திருமணம்**

கைதடி வடக்கு, நல்லூர் வில்லவராய முதலியார் வழித்தோன்றலில் வந்த திரு.சரவணமுத்து வில்லவராயர், திருமதி வேதநாயகம் தம்பதியரின் மூத்த நங்கையாம் நாடறிந்த குணவழகி ஆசிரியை பொன்னம்மாவை மதிமுகம் கொண்ட மாணிக்ககங்கை யான் கார்த்திகேசர் கரம்பற்றியே அம்மி மிதித்து அருந்ததி தானும் பார்த்து அருகிருந்தோர் வாழ்த்த அந்தணர் வேதமோத மணமாலை தானும் மாற்றி வலமிடமாய் இல்லறமெனும் நல்லறத்தை இனிதே நடாத்தினர்.

**மக்கட் சிறப்பு**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இல்லறம் என்றதோர் இனிய தோணியில், நல்வாழ்வில் குலம் தழைக்க, குல தெய்வமாம் முருகப் பெருமானை நாளும் பொழுதும் தொழுதேற்றி, நற்றவப் புதல்வனாய், தயாளசிந்தனையாளன் தர்மகுலசிங்கம் தலைமகனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பின்பே, கண்ணியம் குன்றாத குணக்குன்று குமாரகுலசிங்கத்துடன், கோகுல பண்பான் கோபாலகுலசிங்கத்துடன், நாவன்மை மிக்க நாவுக்கரசி, ஊரறிந்த உதயகுமாரியுடன், பார்போற்றும் பாவை இலங்காதிலகம் இலங்காராணியுடன், சொல்லின் மைந்தன், விற்பன்னன் வில்லவராயசிங்கம் ஆகிய ஆறு செல்வங்களையும் பெற்றெடுத்து ஆளாக்கிய ஆசான். "கற்க கசடற" என்ற வாக்கியத்துக்கு அமையத் தம் பிள்ளைகளுக்கு இளமையிலே கல்விக்கு வித்திட்டு, ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர். "குயிலைப் பிடித்துக் கூண்டில் அடைத்து, கூவச் சொல்லுகிற உலகத்திலே, மயிலைப் பிடித்து காலை ஒடித்து ஆடச் சொல்லுகிற உலகத்திலே" தம் பிள்ளைகளை அர்த்தமற்ற கட்டுப்பாடுகளுக்கு ஆளாக்காமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எதனையும் எதிர்கொள்ளும் மனவுறுதி ஆகியவற்றைப் புகுத்தி, சிறந்த ஒழுக்கசீலர்களாக உருவாக்கிய பெருந்தகையாளன். இவரது இளையமகள் தாதியாகவும், இளைய மகன் மருத்துவராகவும் ஆக்கம் பெற்ற போது "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை - சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற குறளுக்கு ஏற்பப் பெரிதும் உவகை கொண்டார். இவருடைய ஏனைய பிள்ளைகள் "திரைகடலோடியுந் திரவியம் தேடு" என்ற சான்றோர் வாக்குக்கிணங்கக் கனடிய மண்ணிலே ஒளிவீசி மணம்பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

### மருமக்கள் சிறப்பு

வாழையடி வாழையாக உறவுமுறை கொண்டாடி, குலம் தழைக்க வந்தவரான சாந்தசொரூபினி கமலவதனத்தாள் கமலராணி, கைதடி தெற்கு திரு.திருமதி கந்தையா தம்பதியரின் மகளாம் தக்க தலைவியாய் வந்த முதல்வியுடன் பாசமிகு சொந்தத்தை பாரேற்றி வைப்பதர்க்குப் பாவரசி பரிமளவதனி கைதடி வடக்கு, கைதடி திரு.திருமதி வடிவேலுவின் மகளாம், சோர்வின்றிச் சுற்றமும் சூழலும் புகழ்பரப்ப சரோஜினி வட்டுக் கோட்டை, திரு.திருமதி வீரசிங்கத்தின் மகள் சாந்தமிகு குணாளன் மோகனதாஸ், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் திரு.திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரட்ணம் புதல்வனாம் வாய்மை புகழ்பூத்த சீராளன் ஜெயகுமார், திரு.திருமதி மூத்தையாவின் மகன் தேரோடும் வீதியிலே தென்றலாய் வந்த குணக்குன்று நர்த்தக வித்தகி பேபிசுசிலா, திரு.திருமதி தர்மலிங்கத்தின் மகள் ஆகியோரைக் கண்ணிலும் இனிய நல்மருமக்களாய்ப் பெற்று, நானிலம் போற்ற வாழ்ந்த மாமா இவரன்றோ.

**பேரப்பிள்ளைகள் சிறப்பு**

தலைமகனின் தக்க பேரன்மாராகத் தரணியெலாம் குலம் விளங்க வந்துதித்த றேவின், அனோஸ், கஜன், 'பாசமிகு அப்பப்பாவேயென' கட்டி முத்தமழை பொழிந்த யதுசன், சாருகா, 'அப்பப்பா, அப்பப்பா' என ஆற அமர்ந்து சொல்லாட்சி செலுத்திய தாட்சாயினி தலைமகளின் செயல் வீராங்கனைகளாக வந்துதித்துச் சிறிதுகாலம் 'தாத்தா தாத்தா'வெனத் தாவிப்பாய்ந்து கட்டி யணைத்துத் தோளேறி, முதுகேறி, கூடிக்குலாவி; பாசக்கயிற்றாற் பிணைக்கப் பட்ட குணவழகி வினிதா, தாத்தாவின் செல்லப்பேர்த்தி பானுகா, சொல்லழகி திவ்வியா ஆகியோருடன் இறுதிவரை கூடவேயிருந்து குறும்புகள் பல செய்து 'தாத்தா தாத்தா'வென சுழன்றுவந்த நர்மதன், கட்டியணைத்து, கதைகள் பலசொல்லி கண் முன்னால் கடைசி வரை இருந்த வித்தகியாள் சாருமதி, பேர்பூத்த பேரர்பின்னே சாந்தழகன், கார்மேகவண்ணன், கோபிகன், சந்திர முகத்தாள் நிலாவிழி ஆகிய பதின்மூன்று பேரபேர்த்திகளுடன் இனிதே இன்புற்று வாழ்ந்த உத்தம சீலர் இவரன்றோ.

**மைத்துனி, மைத்துனன்மார் சிறப்பு**

நல்லூரர் வில்லவராயர் முதலியார் மரபில் தோன்றிய கண்ணியவான் கார்மேகம் போற்றும் வள்ளல், முன்னேசென்ற புகையிரத நிலைய அதிகாரி இராமலிங்கத்துடன் செங்கமல பார்வேந்தன் பொன்னம்பலத்துடன் எழுத்தாணியால் ஊரை யாண்ட கண்கண்ட மைத்துனன், பாராளுமன்றமொழி பெயர்ப்பாளர் குமாரசாமியுடன், சொல்லுபுகழ் சோர்விலா பாசமிகு மைத்துனி செல்லம்மாவுடன், அவர்தம் கணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்பாளன், வர்த்தகராம் சுப்பையாவுடன், மக்கட் செல்வங் களான உதய ஞானதேவி, உதயயோகேஸ்வரி, காலம்சென்ற கலாநிதி ஆகி யோரை பெறாமக்களாகவும், பிரணவன், நிந்துகா, சதுர்ஷிகா ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும், மைத்துன, மைத்துனியாகவும், சகலனாகவும் கூடி மகிழ்ந்து ஒரு கலத்தில் உணவருந்தி மகிழ்ந்து வாழ்ந்தவர் இவரன்றோ.

**ஊரவரின் உணர்வில்**

நாட்டுக்குதவிய நல்ல பண்பாளனாய்
பாசமுடன் ஊரவரும் ஒட்டி உறவாடி
கள்ளமில்லா உள்ளம் கொண்ட கார்த்திகேசர்
வாத்தியார் என்ற நாமத்துடன்
கலங்கரை விளக்காய் திகழ்ந்தவனே
நேசமுடன் பிள்ளைகளுக்குப் பண்பைப் பூட்டி
வளம்பல சேர்த்து வளமாக
பாசமுடன் வாழ வைத்தவனே
சொல்லாமல் வந்தாலும் உணவளித்து
சொந்தம் கொண்டாடும் உத்தமனே
கந்த சஷ்டிக் காலங்களிலும் திருவிழாக்காலங்களிலும்
தேவாரம்பாடும் பயன் உரை சொல்லும் உன் திருவாய்
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நல்வழி காட்டிய உத்தம சீலா
எப்படி மறப்போம் எங்கள் வள்ளலை
உங்கள் ஆத்மா சாந்திபெறப் போற்றிடுவோம்
கந்தனவன் திருப்பாத மலரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

கரம் பிடித்த நாள் முதலாய் கனிந்த மொழி பேசி
கனவிலும் பிரியேன் என்ற மொழி பொய்யாச்சே
கரம் பிடித்த காலனவன் பாசக்கயிறு வீசுகையில்
என்னவெல்லாம் நினைத்தாயோ என்னுயிரே நானறியேன்
இப்படியெனைத் தவிக்கவிட்டுப் பெரியசுமை எனதாக்கி
தழல் மெழுகாய் நானிருக்கத் தனிவழி நீ போனதென்ன?
சொல்லாமல் எங்கும் சென்றதில்லை - இன்று
சொல்லாமல் சென்ற இடமெங்கே?

வானிழந்த பயிராகி வாடி நின்றேன்
மதியிழந்த வானமெனப் பொலிவிழந்தேன்
தேனிழந்த மலராகி சிந்தை நொந்தேன்
திசையிழந்த கப்பலெனத் தத்தளித்தேன்
மஞ்சளும் குங்குமமும் நானிழந்தேன் ஐயா
மங்கலத் தாலியும் கழற்றி வைத்தேன் ஐயா
பூவும் பொட்டும் இழந்தேன் இன்று
பெரும்பாவியாகிக் குளறி அழுகின்றேன் ஐயா.

பஞ்சு போன்ற மனம் படைத்த என் செல்வமே
பாவியெனப் பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ
கலைசிந்து முகவடிவக் காட்சி காணக்
கதிகெட்டேன் இனியென்ன செய்வேனையா
அலைகடலும் அமைதிபெற வழியுண்டாம்
அபலையெனக் காறவழி உண்டோ என் தெய்வமே
வலைபின்னி விட்டதொரு மானேயாகி
வாழ்வெல்லாம் துடிப்பேன் ஐயோ ஐயா.

அன்பு மனைவி
பொன்னம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகன் புலம்பல்

பெரியதம்பி என்று கூப்பிடும் உங்கள் குரல்
பெரிதாக என் செவியில் கேட்குது பப்பா
காலமெல்லாம் வழி காட்டுவீர் என்று நானிருக்கையில்
காலனுமைப் பிரித்துவிட்டான் என்னிடமிருந்து
மூன்று மாதங்கள் கூடிக் களித்திருந்த வேளையில் உங்கள்
முப்பரிமாணத்தைக் கண்டேன் பப்பா
சாப்பிடப் போகும்முன் பெரிய தம்பி எங்கே
சாப்பிட்டு விட்டானா என்று கேட்பீர்கள் பப்பா.

தேன் தமிழில் தேவார பதிகங்கள் பாடும்
திருவாயால் ஒரு நாளுமெனைச் சினந்ததில்லை
வாழ் நாளில் குறையேதும் வைத்தது இல்லை பப்பா
வழக்கத்துக்கு மாறாக ஏன் என்னைக் கலங்கவைத்தீர்
அள்ளி அரவணைத்த உங்கள் கைகளை நான்
வெள்ளிச் சுடரொளியால் ஏற்றி வைத்தேன்
ஆண்டு முழுவதும் என்னருகில் இருப்பீர்களென்றால்
அந்தரங்கமாகத் தனிவழி போனதென்னே?

நான் வாழக் கனிமொழிகள் பல சொன்னாய் எனை
நாடாமல் எங்கு சென்றாய் பப்பா
எல்லை இல்லாத அன்பைத் தந்த என் அன்புப் பப்பா
எல்லை கடந்து சென்றதென் மாயமென்ன?
நாடும் காலம் கனிந்த ஞாயிறு நாளில் எனை மறந்து
கனதூரம் காடுவழி போனதென்னே
மீண்டுமொரு முறை பப்பா என்று நானழைக்க
மீளும் நாள் எப்போது பப்பா

அன்பு மகன்
தர்மகுலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தமருமகள் புலம்பல்

தந்தையாய் நிழல் தந்த மாமா
தரணி போற்ற வாழ வழி வகுத்த மாமா
மூத்த மருமகளாய் காலடி வைத்தபோது
முறுவலுடன் எனை வரவேற்ற மாமாவே
உறவில் உரமூட்டி முதன்மையானாய்
உறுதியாக வாழ வழி சமைத்தாய்
பிள்ளை என்று அழைத்து முகம் மலர்ந்தாய்
பிள்ளை போல் பேணி வளர்த்தாயே
கள்ளமில்லா முத்துப் பல்லுச் சிரிப்பொலி
காதினில் வந்து ஒலிக்குது மாமா
கள்ளம் இல்லா அன்பைத் தந்தாய் மாமா
கனிவுடனே பல கதைகள் சொல்லிடுவாய்
கொழும்பிலிருந்து நான் வருவேனென்று
கோடியாக பொருட்கள் குவித்து வைப்பாய்
எல்லை இல்லா அன்பைத் தந்த என் மாமா
எளிதாக எனை விட்டுச் சென்றதேனோ
உள்ளம் கதற ஊனுறக்கம் இல்லாமல்
ஊமையாகி விட்டேன் மாமா
எமக்கெல்லம் வழிகாட்டிய தந்தையே
என்று வருவாய் ஒரு முறை மாமா என்றழைக்க.

அன்பு மருமகள்
கமலராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மகன் புலம்பல்

நம்ப முடியவில்லை நாதியற்றுப் போய் விட்டேன் பப்பா
நாவெழ மறுக்கிறது நரம்புகள் வலிக்கிறது
சின்னராசாவெனக் கூப்பிடும் உங்கள் குரல் என் காதினிலே
சிங்காரமாக ரீங்காரமிடுகிறது என் பப்பாவே
கண்மூடித் தூங்கும் போதும் என் பப்பாவின் குரலொலி
காற்றலையாய் வந்து முட்டி மோதுகிறதே
எத்தனையோ நினைத்திருந்தேன் செய்வதற்கு ஆனால்
எண்ணமில்லாமல் எனை விட்டு ஏன் பிரிந்து போனாய்?

உன் இடுப்பில் எனை சுமந்து வீதி உலா வந்த நாளை
உனை நினைத்து வீதி வரை வந்து பார்க்கிறேன் பப்பா
தோழமை நிறைந்த நண்பனைப் போல் என் பப்பா
தோள் தொட்டுப் பேசுவாரே என்னுடன்
உனது ஆழ்ந்த சிந்தனையால் அரவணைத்த என் பப்பா
உன் அந்திம மரணம் கேட்டு ஆடிப்போய் விட்டேனே
கனடாவில் நானிருந்து வந்திறங்கியபோது
கட்டிப்பிடித்துக் கொஞ்சிய முகம் கரியாகிப் போனதேனோ?

நன்றாகப் பழகி நல்லவர் மதிக்க என் பப்பாவுடன்
நாளும் இணைந்திருப்பேன் என்றெண்ணியிருந்த வேளையில்

நயவஞ்சகக் காலனவன் சிந்தை தயங்காமல் என் பப்பாவை
கயிறு வீசி அழைத்துச் சென்றானோ
மலை பிளந்தது போல் பிளந்த என் நெஞ்சு
மாய்கின்ற நிலைமாற வழியில்லையே பப்பா
மருப்பு ஒடிந்த மான் கன்று போல
துரும்பாய் நான் துவழுகின்றேன் பப்பா

அன்பு மகன்
குமாரகுலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மருமகள் புலம்பல்

கண்ணாடிப் பாத்திரத்தில் கல்லெறிபட்டது போல் என்
எண்ணக் கனவுகளெலாம் சிதறிப் போயினையோ
எண்ணமெனும் தேன் கலசத்தில் உனைப் பார்க்காமல்
ஏங்கி ஏங்கி அழுகின்றேன் என்னருமை மாமாவே
காவியமும் பொய்யாச்சு கண்ணீரும் வற்றியாச்சு
ஆசைகள் வீணாச்சு இனி அமைதி காண்பேனோ
அன்பு மழையில் அரவணைத்த எங்கள் மாமாவை
கொள்ளைப் பசிகொண்ட காலனவன்
வாவென்றழைத்த மர்மமென்ன
கனடாவில் இருந்து நாங்கள் வந்தபோது எங்களை
காணவில்லையென்று பாதிதூரம் வரை வந்து பார்த்து நிற்பீர்
கள்ளமில்லா காவிய நாயகனைப் பார்க்க விடாமல்
கருங்குலத்தோன் காவிச் சென்றதேனோ
நேற்றிருந்த என் மாமாவின் பூப்போன்ற பொன்முகம்
நெருப்பால் எரிந்து கரியுண்டு போனதேனோ
வாழ்வில் நாம் ஏணிபோல் உயரத்தில் ஏறி நிற்க
வளமெல்லாம் தந்த எங்கள் மாமா
சடமான உன் பொன்னுடல் தணலாகத் தானெரிய
மருமகள் நான் பார்த்திருக்க விதியாச்சே மாமா
மீண்டுமொருமுறை மாமா என நானழைக்க
மீண்டு வா மாமா என்னருகில்

அன்பு சின்ன மருமகள்
பரிமளவதனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மகன் புலம்பல்

அன்பு மழையில் எனை அரவணைத்த என் பப்பாவே
அகாலன் வந்துனை அழைத்துச் சென்றதுவே
வவா வவா என்று கூப்பிடும் சத்தம் என் பப்பாவே
வாசல் வரை வந்து கேட்குதுவே
மாமலையின் ஜோதி மங்காப்புகழ் கொண்ட மணிவிளக்கு இன்று
மரமாகிப் போக விதியாச்சே
பப்பா என்று நான் உனை அழைக்க
பாரிடத்தில் இன்று நீங்கள் இல்லை பப்பா

கொழும்பில் நான் உங்களுடன் நின்ற வேளையில்
கொஞ்சும் மழலைச் சொல் கேட்டேன் பப்பா
பிள்ளைப் பாசத்தால் பிரச்சனைகளுக்கு மத்தியிலும்
பிரிய மனமில்லாமல் வந்து போனீர்களே
ஆழ்கடல் தாண்டினாலும் பப்பா உங்கள்
அருமைக் குரல் காதில் ஒலிக்கின்றனவே
அன்புச் சிகரமே அன்பான பப்பாவே
அழுதழுது துடிக்கின்றேன் அருமை மிகு பப்பாவே

தொலை தூரம் தானிருந்து பப்பா உங்களுக்கு
தொலைபேசி எடுக்கும் போது
தம்பி வவா என்று கூப்பிட்ட அமுத மொழி இனியெங்கே
தரணி போற்ற வாழ்ந்த தாமரைச் செம்மலே
கடைசி நேரத்தில் உங்கள் பாச முகத்தை
பார்க்க கொடுத்து வைக்கவில்லை பப்பா
ஆறாது ஆறாது என் மனம் ஆறாது பப்பா
மின்போன்ற வாழ்க்கைதனை நியமென்று நம்பி
நான் அழுகின்றேன் என் அருமை பப்பாவே
குலச்சுடரினை ஏற்றிவைத்து எங்கள் குடும்ப விளக்கே
பப்பாவென நானழைக்க திரும்பி வா ஒருமுறை

ஆசை மகன்
கோபாலகுலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மருமகள் புலம்பல்

வெள்ளையுள்ளமாய் உங்களைக் கண்டேன்
தொல்லை தராதோர் பிறவியாய்க் கண்டேன்
அல்லும் பகலும் நினைவினில் நிற்கும்
அன்பு உருவமாய் உங்களைப் பார்த்தேன்
பிறப்பு என்பது உண்மையென்றானால்
இறப்பு என்பது உண்மை அதுதானே
தெரிந்தும் உள்ளம் கேட்பதில்லை
துயரம் அழிந்து போவதில்லை
நொடிக்கு ஒரு தடவை தேனீர் கேட்டு
கொடுத்த அந்த உறவை மறப்பேனா
வடிக்க முடியாத துயரம் தன்னில்
துடிக்கும் என் இதயம் என்பதே உண்மை
இறைவனடியில் சென்றே சேர்ந்து
அமைதியடைந்து பெற்றிடும் பேறு
என்றே மனதைத் தேற்றிக் கொண்டு
சாந்தி வேண்டி தொழுது நின்றேன்.

ஆசை மருமகள்
சரோசினி

வெற்றியின் இரகசியம் என்பது தன்னம்பிக்கை,
விடாமுயற்சி, நேர்மையான உழைப்பு ஆகும்.
The secute of our success in our efforts,
Our sincerity and dedication towards our work

-விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் புலம்பல்

பொன் பெறலாம் புகழ் பெறலாம் செல்வம் பெறலாம்
பொழுது புலர்ந்து பட்டால் பப்பா திரும்பி வரமாட்டார்
நான் தாய் தந்தை வடிவில் உன்னுருவம் கண்டேன்
நாளாக விம்மியழ நாடிவந்த கதை யென்ன
நீங்கள் கூறும் அறிவுரைகள் என் காதில் ஒலிக்கிறதே
நீண்ட பயணத்தை ஏன் தான் தெரிந்தெடுத்தீர்
சொன்னாலும் கேட்காத காலனவன் இடைமறித்து
வாவென்று கூப்பிடுகையில் ஓமென்று போயினையோ

நான் வரும் வரை நீங்கள் காத்திருப்பீர்கள் என நினைத்தேன்
நாட்கள் நகர்ந்தோட மூப்பு நரைதட்ட
என் அன்புத் தெய்வத்தை அமர காவியத்தை
என் விதிவழியால் இழந்து விட்டேன்
என் பிள்ளை ஆண்பிள்ளையானால்
என் கதை வேறு என்ற சொல்லழகன்
என் முகத்தைப் பாராமல் போனதென் சதியென்ன
கட்டி அரவணைத்து பப்பா என்று கொஞ்சிக் குலாவி
கதைபேச வேண்டுமென்ற கனவு கரியாகிப் போனதுவே

ஒன்றாகத்திரிந்து ஒன்றாக வேலை செய்து
நன்றாகப் பழகி நல்ல கதைகள் பல பேசி
பண்பானபப்பாவே உன் அன்பு மகள் முகம் பாராமல்
பரஞ்சோதி காணப் போனதென் மர்மமென்ன
உங்களை நான் விட்டுப் பிரிந்ததால் தானோ
உங்கள் சந்தன உடம்பு பாதியாச்சு
சந்திரச் சிரிப்பழகை கண்ணால் பார்ப்பேனென்றால்
சரித்திரத்தை முடித்துவிட்டு தனிவழி ஏகினையோ
மீண்டுமொரு மறுபிறவி எடுத்தால் நான் உங்கள்
மகளாக உன்மடியில் தவழ்வேன்.

அன்பு மகள்
உதயகுமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மருமகன் புலம்பல்

ஒன்றாக உறவாடிய நாட்கள்
இன்று கரை புரண்டு வருகின்றது
கண்ணை இமை காப்பது போல் காத்த மாமா
கலங்க விட்டு தனிவழி போனதேனோ
அன்று அரவணைத்து நல் வழிகாட்டி
ஆரத்தழுவி தம்பியென அழைத்து
நாடிவந்த வேளையெல்லாம் நல்லுதவிகள் செய்த நீங்கள்
நாடாமல் எனை நீ எங்கு சென்றாய்
ஆசையுடன் நான் வீடு வரும் வரை அன்புடன்
விழிமேல் வழிசமைப்பாய்

எந்த நேரத்திலும் பப்பா என்று கூப்பிட்டால்
என்னவென்று எழுந்தோடி வருவீரே மாமா
திரவியம் தேடவென நான் கடல்கடந்த வேளையில்
திடமுடன் இருப்பீரென நான் நினைத்தேன்
கதி கலங்கி இருந்த வேளையில் என் மாமாவை
கட்டியம் கூறினாள் என் துணைவி உதயா
யாரும் கலங்க வேண்டாம் என் பப்பாவை
காலமெல்லாம் நான் பார்ப்பேன் என்றிருந்தாள்-ஆனால்
விதி சதி செய்து அவளைப் பிரித்ததனால்
சொல்லிழந்து சோறிழந்து போனீர்களே மாமா
கொள்ளை ஆசைகொண்ட பானுப் பேர்த்தியும்
கோவென்று கதறி அழ விட்டுப் பிரித்ததால்
உறவுப் பாலம் உருக்குலைந்து போனதென்று
ஊமையாகிப் போனீர்களோ மாமா
வந்து பார்க்க திடம்கொண்ட வேளைதனில்
வழியேதும் தெரியாமல் வழக்கொழிந்து போயினையோ
ஆறவில்லை என்மனது ஆனாலும்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன் சாந்தியடைய

அன்பு மருமகன்
மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகளின் இதயக்குமுறல்

அன்பான பப்பாவே, அருமை அப்பாவே
சிறுவயதில் இருந்து என்னைச் சீராட்டி,
பாராட்டி கல்வியில் சிறக்க வைத்தீர்கள்.
தாதிய சேவைதனில் கொண்டு போய் இணைத்து
எனது வாழ்வு உயர வைத்தீர்கள் - அதன் பலனாக
உங்களுக்குபல நோய்கள் வந்திட்ட போதும் கூட
அருகிருந்து காப்பாற்றி வந்தேனே.
நான் வேலையில் இருந்து வீடுவரப்பிந்தினால்
வழிமேல் விழிவைத்து காத்து இருப்பீர்களே.
தங்கச்சியைக் காணவில்லை. என
எல்லோருக்கும் சொல்லி கவலைப்படுவீர்களே.
"தங்கச்சி, தங்கச்சி என எந்நேரமும் கூப்பிடுவீர்களே.
பேரன் எங்கே! பேர்த்தி எங்கே! என வீட்டைச்
சுற்றிச் சுற்றி வருவீர்களே. அன்பு கலந்த கண்டிப்புடன்
அருகிருந்து வழிநடத்தினீர்களே. அந்தோ காலன் செய்த சதி
உங்கள் பேரனுக்கு ஏற்பட்ட நோயினால்
உங்களுடைய இறுதி நேரத்தில் உங்களுடன் இருக்க
முடியவில்லை. பப்பாவிற்கு முடியவில்லை என அறிந்ததும்
ஓடிவந்து உங்களை உயிருடன் பார்க்க முடியவில்லை.
உங்கள் முகம் காணாது துடியாய்த் துடிக்கின்றேன் துவள்கின்றேன்

என்றும் உங்கள்
அன்பு மகள் ஜெ.இலங்காராணி

# இளைய மருமகனின் புலம்பல்

தந்தையின் பாசத்தை நான் தரணியில் இழந்த போதும்
வந்த நல்ல மாமா நீங்கள் தந்தையாய் காட்சி தந்தீர்
வந்திடும் வாழ் நாளெல்லாம் தந்தையின் நினைவில்
பந்த பாசங்கள் வைத்த என் எண்ணமும் சரிந்தே போச்சு

என்றும் அன்பு
மருமகன் மு.ஜெயக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகனின் இதயக்குமுறல்

பப்பாவென அழைத்தால் அருகோடி வருவாயே
அன்பு நிதம் சொரிந்து அருகிருந்து பார்ப்பாயே
மகிழ்ந்து மாநிலத்தில் இன்பமுடன் வாழ்வதற்கு
மகிழ்வுரைகள் பல பகன்று வாழ்க்கையையே சிறக்க வைத்தீர்

சும்மா இருந்திடாமல் எந்நேரமும் சுறுசுறுப்பாய் திரிவீரே
சுகபோக வாழ்க்கையில் சொர்க்க லோகம் சென்றீரோ!
ராசா, ராசா என என்னை அழைத்திட்ட பப்பாவே
ராசாவைப் பார்க்க ஓடித்தான் வந்தீரே

கடைக்குட்டியாய் பிறந்தநான் என்றும் உம்முடன் இருப்பேன் என இருந்தேனே
கடைசி நேரம் உமது முகம் பார்க்க கொடுத்து வைக்கவில்லையே
மாயவுலகை விட்டு மலரவன் சேவடிக்கு
மகிழ்ந்து தான் சென்றீரோ மனம் வாடி அழுகின்றோம்
மிக்க துயரோடு நாம் மனம் சோர்ந்து வாடுகின்றோம்
மின்னலாய் மறைந்தீரே மீண்டும் எப்போ வருவீர்?

என்றும் உங்கள்
அன்பு மகன்
K.V.சிங்கம்

1. ஆசிரியரைவிட நூறு மடங்கு பிதா உயர்ந்தவர். அதைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர் நம்மைப் பெற்ற தாய்.
2. ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவது இல்லை. அவனுடைய மனம்தான் உருவாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மருமகளின் புலம்பல்

கள்ளமில்லா நெஞ்சத்து மாமாவே
    கனிவுடனே பாசத்தைத் தந்தீரே
சோதிடத்தில் வல்லவரே மாமா
    சொன்ன செய்தி என்றும் தவறியதில்லை மாமா
பிள்ளை, பிள்ளை என என்னை அழைத்தீர்களே மாமா
    பிரியமுடன் உங்களை நேசித்தனே மாமா

குணத்தில் குன்றா விளக்கே மாமா - உங்கள்
    குறிப்பறிந்து நடந்தனே மாமா
பண்பினால் எம்மை மருகராக்கி பாரினில் ஏங்கவிட்டு
    புண்புறு காலன் செய்த இக்கொடுமை பொறுக்குமோ
இப்படியும் செய்தி வருமென்று நாம் கனவிலும் நினைக்கவில்லை
    காலனவன் கூட்டிவிட்டான்
உங்கள் ஆத்மா சாந்தி இறைவனடி சேர நாமெல்லாம் வேண்டுகிறோம்.

என்றும் உங்கள்
அன்பு மருமகள் V.பேபி சுசிலா

## மைத்துனர்கள் புலம்பல்

ஒரு கொடியின் மலர்போன்று சேர்ந்து உறவாடி
    ஒருமையுடன் உமைப் போன்ற மைத்துனரை நாம் காணோம்
உள்ளத் தூய்மையுடன் எம்முடனே உறவாடும்
    உத்தம திலகமே உமைப்பிரிந்து வாடுகின்றோம்
எம் குடும்பத் தலைவனாய் என்றும் இருந்து நீர்
    எழில் சுடர்மணி விளக்காய் ஏற்றமுற வைத்தீரே
உற்ற உறவு நீர் என்று - என்றும்
    உள்ளமதை ஆற்றி நின்றோம்
சற்றும் காலன் பொறுக்கவில்லை
    சம்மதமும் கேட்கவில்லை - கொற்றவன்
தான் கொண்டு செல்ல கூற்றுவன்
    முந்தி விட்டான். எம்மைத் தேற்றுவார் யாரிப்போ!

சகலன், மைத்துனி
சுப்பையா, செல்லம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *My dearest Thatha*

There are so many things I want to say,
That every night I sit and pray,
Hoping that you know how much
I miss you and I love you.
I love you grandpa, I will love you everyday.
I knew you'd soon be in a happier place.
A place where no men can be except you
There's so much hurt I feel inside,
And in nobody I can reveal.
But I know you are watching over us and protecting us.
Why did God have to take you away from me?
You were my father, my mother and my best friend
and you will always be the special person in my heart.
In my heart, there's a place for you only and it will be
where you will be living forever.
There can never be a man like you in this world.
A caring person, a loving father, the sweetest grandfather
and the best husband on earth.
I can remember when you,
Banu and I used to walk for miles.
Carrying Banu and holding me in your hand.
We walked and walked.
We didn't know time passing.
One of the best memories I can never forget.
You used to bring us to walk and buy us
everything we wanted.
You played with me, you told me stories,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

you grew me up and you made sure I was happy.
You took care of me,
showed me affection and supported me.
When you were there, I had the whole world in my hand
but after you left I feel like I got no one for me.
If I know what love is, what affection is, what caring means,
it's all because of you. You are great Thatha.
Thatha won't you come back to me? I want to share
my happiness and my sorrows with you.
There is no one else I can share it with except you.
I want to thank you for helping me
to be the person I am right now.
If I had one wish, I would ask God to send you back to me.
Will I ever get to see you and tell you how much
I love you and how much you mean to me?
I have never seen God in my life, but you are God to me.
I do not know how I am going to thank you
for everything you did to me.
You were there for me when I was small and
I want you to be with me and guide me in life until the end.
If there is another life, I would pray God to be reborn
as your granddaughter just to be with you.
That special smile of yours and
your thoughts will always be with me.
I MISS YOU.

***By your granddaughter:***
***Vinitha Mohanadas***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *My Beloved 'Thatha'*

Days have gone by and I still can't get you out of my mind.
You were the perfect man I've ever known.
I wanted to see you so badly.
We delayed those days hoping you will be waiting to see us.
Last time I saw you I was only about 5.
I will never forget the times I had with you
and how much I loved you.
It is sad to know that you will never be here to
watch me finish growing up. But I won't forget you.
You were the one who named me.
You put me on your lap, hold my hands
and taught me how to write.
You would never let me cry and got me everything I wanted.
You would never let me walk, always carried me.
The day I separated from you I cried and cried.
Didn't you see thatha in my eyes that I wanted to stay with you?
Why did you let me go?
If God granted me one wish, I would ask you back.
Each moment we spent together, will be special to me forever.
When I felt like I had no one, I knew you were there
But now who do I turn to? I want to give you one last hug,
Just one more kiss on the cheek, But I can't Thatha.
I just want to let you know that I love you, One last time.
I have been afraid of this nightmare for so long,
now how could this have happened?
I rub my eyes in disbelief hoping, praying that it isn't true.
It is so hard to believe you are no longer there for me.
You loved your family and everyone you have seen.
You will always have a place in my heart and
I will know that you are watching me from heaven.

***By: your granddaughter***
***Banuka Mohanathas***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *My divine treasure*

The Best man I have known is my grandfather
I haven't seen him
But I heard a lot of memories about him
I've imaged him
As soft as a pillow
AND
Has a heart of a butterfly
Every time I fall asleep
I wonder why he had to leave
WHY? But now I know he won't need to suffer through pain
He's in a place where he doesn't need to suffer
IN HEAVEN
I know he'll guard me through my pain
BUT
Why couldn't he do it when he was alive?
When I look at the mirror
I image him there
But that's just illusion
NOW'S HE'S MY GOD WHO'LL GUARD ME
THROUGH MY PAIN! HE'S THE BEST MAN IN THE WORLD!!

***By his granddaughter:***
***Thiviya Mohanathas***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *To our grandfather,*

Even though we never got to see you,
you are the greatest grandfather we can ever have.
We feel sad that we never got to see you but
we know that you are watching over us in heaven.
We wish you will be born as our grandfather in the next life.
We know that you are in a happy place
We want you to be with us forever.
Oh Grandfather, why did you have to leave us?
We miss you so much
We will miss a great person in our life
We hope you are happy where you are.

Rest in peace Grandfather

***By your grandsons:***
***Revin, Anoos and Kajan***

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அப்பப்பா அப்பப்பாவென கதறி அழும் குரல் கேட்டு
அரவணைக்க முடியவில்லையே உங்களுக்கு
அரண்டு புரண்டு அழுதாலும் ஆறாது சோகம்
அருகில் நீர் எமக்கு இன்றில்லை
நீங்கள் எங்களை கட்டித் தழுவிய நாட்களை
நினைக்கும் போது கண்ணீர் கரைபுரண்டோடுகிறதே
வெண்பல் சிரிப்பழகும் வெள்ளை நடையழகும்
வெண்ணீறாய் போனதுவே
எங்கு நீர் போனீர்கள் எங்கே சென்றீர்கள்
ஏன் தான் உங்களுக்கு எங்கள் நினைப்பு வரவில்லை
எம்மையும் மறந்தா இறைவனிடம் ஏகினீர்கள்
எப்போ வருவீர்களென ஏங்குகிறோம் உங்களை நினைத்து
எம் அருமை அப்பப்பாவே

அன்பு பேரப்பிள்ளைகள்
யதூஷன், சாருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்த்தி புலம்பல்

என் ஐந்து வயதிலே
உன் அன்பைக் கண்டேன்
அன்பு மழையில்
வெகு இன்பம் கொண்டேன்
இன்னும் நனையவே எண்ணங் கொண்ட வேளைதனில்
தாத்தா எங்கு சென்றனையோ

கண்கள் இரண்டிலும் உந்தன் கனவு
நெஞ்சம் எங்கினும் உந்தன் உறவு
கொஞ்சும் பேச்சிலே விரிந்த கருணை
தொடரும் முன்பு நீ எங்கு சென்றனை

உந்தன் மடியில் ஊஞ்சலாட
அன்புக் கைகளில் சாய்ந்து களிக்கவே
அந்த நாட்களை எண்ணி மகிழ்ந்து கொள்கையில்
நான் காத்திருக்கையில் நீ எங்கு மறந்து சென்றனையோ
தாத்தா என்றுனைச் செல்ல அழைப்பினில்
அருகில் அழைக்க நான் ஆசை கொள்கையில்
பேர்த்தி என்பதனை மறந்து போனாயோ
பின்பு ஓர்முறை என்று வருவாயோ

கண்கள் நிறையவே உந்தன் ஆசை
நெஞ்சம் முழுவதும் உந்தன் ஆசை
தெய்வம் பார்க்க நீ சென்றாய் என்பதால்
சாந்தி வேண்டி நான் தொழுது நிற்கின்றேன்

அன்புப் பேர்த்தி
தாட்சாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா எங்கே போனீர்கள்

அமுதூட்டி வளர்த்த எங்கள் அன்புத் தாத்தா
அற்புதமாய் மறைந்தது என்ன எடுத்தியம்பும்

அன்புக் கரம் நீட்டி வரவேற்கும் தாத்தா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ சொல்லும்

ஆலயமணி ஓசை கேட்டவுடன் பிரகாசிக்கும் - உங்கள்
அழகிய வதனத்தை இனி எப்போ காண்போம் நாம்

சாப்பாட்டுடன் தின் பண்டங்கள் தந்து எம்மை
அன்புடன் அரவணைத்துப் பாசமழை பொழிந்தீரே

பேரன் எங்கே, பேர்த்தி எங்கே என தேடித்தேடி
அரவணைத்தீர்களே
பேதலித்து நிற்கின்றோம் செய்வது என்ன என்று தெரியாது

அம்மா அடித்தாலும் உங்களிடம் ஓடிவந்து அடைக்கலம்
தேடுவோமே
என் செல்லக் குட்டிகளுக்கு அடிக்காதை என்று
அம்மாவைக் கண்டிப்பீங்களே

உங்கள் அன்புக் கண்டிப்புடன் வளர ஆசைப்பட்டோமே
எங்களை ஏமாற்றிவிட்டு எங்குதான் சென்றீர்கள் தாத்தா

ஏணியாய் நின்று எங்களை உயர்த்தி விடுவீர்கள் என்றிருந்தோம்
உங்களை இனி எந்தப் பிறவியில் காண்போம் நாம்

நீவிர் எத்தனை பிறப்பு எடுத்தாலும் அத்தனை
பிறவிகளிலும் எமக்கே தாத்தாவாக வரவேண்டும்.

அன்புப் பேரப்பிள்ளைகள்
நர்மதன், சாருமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பா எங்கே போனீர்கள்

அப்பப்பா எங்கே நீங்கள் போய் விட்டீர்கள்
அப்புச்சாமியிடம் போய் விட்டதாக எல்லோரும் சொல்கிறார்கள்
என்பேரன், என்பேரன் என என்னை அரவணைத்தீர்களே
என்னையுமா மறந்து சாமியிடம் சென்று விட்டீர்கள்
எங்களைப் பார்க்க ஓடி வந்தீர்களே அப்பப்பா
எங்களில் என்ன குறைகண்டு எங்களை விட்டு சென்றீர்கள்
உங்கள் பேர்த்தியை பார்க்காமலே போய் விட்டீர்களே
உங்கள் பேர்த்தி அப்பப்பா என கதறுவது கேட்கவில்லையோ
எங்களை ஏமாற்றி விட்டு எங்கு தான் சென்றீர்கள்
எங்களிடம் மீண்டும் ஒருமுறை வராயே அப்பப்பா

அன்புப் பேரர்கள்
கோபிகன், நிலாவிழி

## பெறாமகளின் துயரம்

அன்போடு என்றென்றும் ஆதரித்துக் கதைகூறி
அறிவுரைகள் பல பகன்று ஆசி தருவீரே
பெறாமக்கள் போல் நினைக்காது - என்றும்
பெற்ற பிள்ளைகள் போல் நினைத்து வழி நடத்தினீரே
நற்காரியங்கள் எல்லாவற்றிற்கும் முன்னிற்பவரே
நாம் என்றும் சிறப்புடன் வாழ வழி சமைத்தவரே
நாங்கள் வந்து பார்த்தபோது நன்றாகத்தானே இருந்தீர்கள்
நாம் என்ன பாவம் செய்தோம் இச்செய்தி கேட்பதற்கு
பப்பா என்று நான் அழைத்த போதெல்லாம்
தங்கச்சி என்ற வார்த்தையில் கனிவு கண்டேன்
ஊனுருகு உடல் சோர உமது பிரிவெமக்கிங்கு
உளநெகிழ்வைத் தருகுதே உயர்வான பப்பாவே.

பெறாமகள்
குணம், ஞானம், பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் உயர்வான பப்பாவே

அன்புடனே எம்மைக் காத்து வளர்த்தீர்
அருங்கல்வி பெறுவதற்கு ஊக்கம் தந்தீர்
வந்த பல துன்பமெல்லாம் தாங்கி நின்று
எந்தவிதக் குறையுமின்றி எம்மைக் காத்தீர்
கண்ணயராது காலமெல்லாம் உழைத்தே நின்ற
கருத்துடனே உயரவைத்தீர். கடமை செய்தீர்

பெறாமக்கள் என்ற பாகுபாடு இன்றி
பெற்ற பிள்ளைகள் போன்று பேணிக்காத்தீர்
பப்பா என்று நான் அழைத்தால் - உங்கள்
தங்கச்சி என்ற வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் கண்டேன்

பாருக்குள் நல்லதோர் பண்பாளனாய் நின்று
பந்தங்கள் நண்பரெனப் பலரும் வாழ்த்த
நேருக்கு நேர் நின்ற நேசனே
நிம்மதியாய் இவ்வுலகில் சாந்தி கொள்வாய்.

பெறாமகள்
குமார், கலா, துஷி(பேர்த்தி)

## தேற்றம்

தொல்லை நிறைந்த இவ்வுலகினிலே
இல்லை என்று உன் இடமில்லை
அள்ளிச் சேர்க்க அலைந்தாலும்
எல்லையில் எதுவும் கொண்டு செல்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில் நீங்காத மாமா

என் அன்பிற்கும், பாசத்திற்குமுரிய மாமாவே தங்கள் இழப்பினைத் தாங்கமுடியாமல் நிலைதடுமாறுகிறேன். நீவிர் இறந்தோட்டையில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டிருந்த போது, நான் பிறந்து விட்டேன் என்ற செய்தி கேட்டதும் எனக்கு பேரின்பலிங்கம் எனப் பெயர் சூட்டியதை எனது தாயார் வாயிலாக அறிந்து பெருமிதமடைந்தேன். அன்றுதொட்டு எமது குடும்ப இன்ப துன்பங்களிற் பங்கேற்று எமது வாழ்வு உயர வழி சமைத்தீர்கள்.

நாங்கள் இருவரும் கதிர்காமக் கந்தன் அருள்பெற யாத்திரை சென்று திரும்பிய அன்றைய நாள் ஞாபகம் இன்று போல என் கண்முன்னே நிழலாடுகிறது. நாட்டு நிலைமை காரணமாக 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டையில் தங்கியிருந்தபோது கூடியிருந்து உண்டு, உறங்கி சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

ஆனால் இன்று நீங்கள் எங்கள் முன்னிலையில் மறைந்து விட்டீர் கள் "பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடம்பு அழியாது" விதைத்தவன் வெட்டிவிட்டான் இது உலக நியதி தங்கள் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மருமகன்
பேரின்பலிங்கம் குடும்பத்தினர்

# எங்கள் பெருந்தகை

கைதடி யூர் கண்ட கார்த்திகேயப் பெருந்தகையே
கார்மேக வேளால குல திலகப் பெருந்தகையே
கந்தன் கயிற்ற சிட்டியானின் காப்பிடமே
கலங்குகின்றோம் காண முடியவில்லை யென்று
கள்ளமில்லா உள்ளமும் கபடமில்லா புன் சிரிப்பும்
கைதை நகர் தந்த கார்த்திகேயப் பெருந்தகையே
காண்பது இனி எப்போது எனக் காண விழைகின்றோம்

வடிவேலு குடும்பத்தினர், (சம்பந்தவழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவில் முதிர்ந்த பெரியார்

திருவாளர் செல்லப்பா கார்த்திகேசர் அவர்கள் அறிவில் மிகவும் சிறந்தவராவார். இவர் மிகவும் குருபக்தி உடையவர். எம்மைக் கண்டால் மிகவும் அன்பாகக் கதைத்து முருகனின் திருவிழாக்கள், பூசைகள், புராணப் படிப்புக்கள் நல்லபடியாக நடக்கவேண்டும் என்று சொல்லுவார். அன்னார் கயிற்றசிட்டி முருகன் மேல் அளவிலா பக்திகொண்டவர். இவர் முருகனின் கந்தபுராணப் படிப்புகளில் தவறாது கலந்து புராணம் படிப்பார்.

இவர் மலைநாடுகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆசிரியர் தொழிலிலிருந்து இளைப்பாறிய பின்னர் மனமகிழ்வுடன் உன்னத தொழிலான விவசாயத்தையும் அன்புடன் செய்து வந்தார். அத்தரணத்தில் சிறிது உடம்பு இயலாது இருந்து சிவபதம் அடைந்தார்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கயிற்றசிட்டி முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

## நியதி

நியதியை உணர்ந்தவர்கள்
கல்யாண வீடு போலவே
அந்தியகாலச் சடங்குகளையும் காண்கிறார்கள்
அபிமன்யுவுடன் இறக்க முயல்கிறான்
தந்தையாகி அர்ச்சுனன்
மாமனாகிய கண்ணன் அப்படிச் செய்யவில்லை
அபிமன்யுவின் தோற்ற வளர்ச்சிகளைக்
கண்டு மகிழ்ந்தது போலவே
அபிமன்யுவின் ஒடுக்கத்துக்கும் மகிழ்கின்றான் கண்ணன்
அபிமன்யு இல்லாத உலக பந்தங்களை
உதறிக்கொண்டு உயர்நலமுறுவதைக் கண்டு
களிகூறுகின்றான் அந்தக் கண்ணன்
கண்ணன்
நியதி என்ற தத்துவத்தை நன்கு தெரிந்தவன்.

க.மு.ஐயாத்துரைக்குருக்கள்
(கிரியாதத்துவநிதி)
கயிற்றசிட்டி முருகன் கோவில் பிரதம குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்

1992ஆம் ஆண்டு இடம்பெயர்வால் அல்லற்பட்டு, அவஸ்த்தைப் பட்டு, ஆதரிப்பாரின்றி, பணம், பொருள், பண்டம் முதலானவற்றை முக்கால்பங்கு மட்டில் இழந்து, தெல்லிப்பழையில் இருந்து கைதடிக்கு கால்வைத்து சமயது "இல்லானை இல்லாள், வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள்" என்னும் முதுமொழிக்கிணங்க அணைத்து, ஆதரவளிக்க எவரும் முன்வராத சமயத்து ஒரு சிலரின் உதவியுடன் சிறிது ஆற சந்தர்ப்பம் கிடைத்தது.

வரும் பொழுது கொண்டுவந்த சில பொருட்களை வைப்பதற்கு மனைவியின் தமையனார் சம்மதித்ததின் நிமித்தம் அவர் வீட்டிலும் வைத்தோம். பின்பு ஓரளவு நிரந்தரமாய், வசதியாக இருக்கச் சந்தர்ப்பம் கிடைத்து, தமையனின் வீட்டில் இருந்து தற்சமயம் வசிக்கும் வாழ்விடத்திற்கு அப்பொருட்களை ஏற்றிவர, வசதியுள்ளோர் முன்வராத இடத்துத்தான் அமரர் கார்த்திகேசு அவர்கள் கைகொடுத்தார். அவரின் அச்செயல்தான் இன்றும் என்றும் இருக்கும்வரை மறக்க முடியாதுள்ளது.

"தம்பி மயில்வாகனம் நீ அந்தரித்துப் போனாய், இப்ப செய்யாத உதவியை பிறகு எப்போ, யாருக்குச் செய்வது நீ எதற்கும் கவலைப்படாதே நான் வண்டிலைக் கொண்டு வந்து உன்னுடைய சாமான்களை ஏற்றித் தருகிறேன் என்று ஆறுதல்கூறி அவ்விதம் செய்த செயல்தான் இப்பவும் நெஞ்சில் இடம் பிடித்துள்ளது.

அமரரின் செயல் போற்றப்பட வேண்டியது, காரணம் பாத்திரம் அறிந்து பிச்சை கொடு, உதவி செய்யப்பட்டார் சார்பின் வரைத்து, உதவியின் வகை, தொகை மட்டுமல்ல நேரம் காலம் யாருக்கு எப்போ, எச்சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டதோ என்று அவை ஆராயுமிடத்து அமரரை மறக்கவே முடியாதுள்ளது.

பணம் பொருள், பண்டத்திற்கு பின் நிற்பவர், எப்படியும், எவ்விதத்திலும், நிலையற்ற பணத்தைச் சம்பாதிக்க முயல்பவர்கள் அநேகரைக்கொண்ட இவ்வுலகில் அமரரைப் போன்றோர் அரிது. அரிது அரிது. இவ்விரமனம், செயல் உடையோர். ஆகவே அமரரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன், அவரின் இழப்பால் துயருறும் அத்தனை பேரையும் தேற்றுவாருமாகுக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி


"அன்பகம்"
கைதடி.

க.வி.மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பற்பல...



எங்கள் அன்புத் தெய்வத்தின் இறைபதம் கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்து எமது துயரிற் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களிற்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பத்திரிகை, பிரசுரங்கள் மூலம் பிரசுரித்தோருக்கும் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை விடுதி இலக்கம் 04 வைத்திய நிபுணர், வைத்தியர்கள், பொறுப்புத் தாதியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், அச்சுவேலி ப.நோ.கூ.சங்க முகாமையாளர், பணியாளர்களுக்கும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உப அதிபர் அவர்கட்கும்; யா/ கைதடி குருசாமி வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும் மேலும் இவ்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் இந்நூலைச் சிறந்த முறையில் உருவாக்கித் தந்த அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

கைதடி வடக்கு,
கைதடி.

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குலவிருட்சம்

* செல்லப்பா + * சின்னப்பிள்ளை

- * சுப்பிரமணியம் + * தெய்வானைப்பிள்ளை
  - இந்திரராசா
- * பொன்னு + * சுப்பிரமணியம்
  - குஞ்சுப்பிள்ளை
  - வள்ளியம்மை
  - பரமேஸ்வரி
  - * செகசோதியம்மாள்
  - சிவபாக்கியம்
  - * கனகமணி
  - பேரின்பலிங்கம்
- * சின்னையா + * சிவபாக்கியம்
  - கமலாஜினி
  - செல்வராணி
- * இராசையா + பரமேஸ்வரி
- கார்த்திகேசர் + பொன்னம்மா
  - தர்மகுலசிங்கம் + கமலராணி
    - றேவின்
    - அனோஸ்
    - கஜன்
  - குமாரகுலசிங்கம் + பரிமளவதனி
    - யதூஷன்
    - சாருகா
  - கோ
- *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்




* அமரர்களை குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org